# இலக்கு

இதழ் 59

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஜனவரி 05, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA



Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku-Web https://twitter.com/Ilakku1





## இதுதான் இறுதி மரணமாக இருக்குமா?


கொழும்பிலிருந்து அகிலன்

நேர்காணல்

## போராட்ட செய்திகளை வெளியிடும் ஊடகங்கள்தான் எங்கள் போராட்டங்களின் உயிர்நாடி

- ராஜ்குமார்





## அமெரிக்காவின் வான் தாக்குதலில் ஈரானின் ஜெனரல் பலி

20 வருட முயற்சியில் அமெரிக்கா வென்றது.

## 39 வருடங்கள் பழமையான விண்ணாங்கம்பிட்டி தமிழ் கிராமம் பறிபோகும் அபாயநிலை

கோ.ரூபகாந்



## அடுத்த 100 வருடங்களுக்கு இலங்கையை தமது பக்கம் வைத்திருப்பதற்கான தந்திரோபாயத்தில் அமெரிக்காவும், இந்தியாவும் தோல்வியடைந்து விட்டன

பிரா.பத்மராஜ்



## இலங்கையை அச்சம் கொள்ள வைக்கும் டெங்கு (Dengue) நோய்

-அருண்மொழி-

# சிறீலங்கா படைத்தரப்பில் மாற்றங்கள் அரசியலும், பாதுகாப்பும் மகிந்த குடும்பத்திடம்



சிறீலங்கா அரசதலைவராக கோத்தபாயா ராஜபக்ச பதவியேற்ற பின்னர் சிறீலங்கா இராணுவத்தில் அதிகளவான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதானது தென்னிலங்கை அரசியல்வாதிகளிடம் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.


கடந்த நவம்பர் மாதம் பதவியேற்ற ராஜபச்ச, டிசம்பர் மாதம் பல படையணிகளுக்கு புதிய தளபதிகளை நியமித்திருந்தார்.

அம்பாந்தோட்டையில் நிலை கொண்டுள்ள 12ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் திலகரத்ன, கிளிநொச்சி படைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் குணரத்ன, திட்டமிடல் பணிப்பாளராக பிரிகேடியர் அப்ரூ, இராணுவத்தின் செயலாளராக மேஜர் ஜெனரல் கமகே, நலன்புரி நிதி பிரிவு அதிகாரியாக கேணல் பத்ம சாந்தா, முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள 59ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் பெரேரா, மதுறு ஓயா பயிற்சி கல்லூரி அதிகாரியாக பிரிகேடியர் கொடித்துவக்கு, முல்லைத்தீவு வெள்ளாம் முள்ளிவாய்க்காலில் நிலை கொண்டுள்ள 68ஆவது படையணியின் 1ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக கேணல் பிரேமவன்ச, கதிர்காமத்தில் நிலைகொண்டுள்ள 9ஆவது சிங்க றெஜிமென்டடின் கட்டளை அதிகாரியாக மேஜர் எல் ஜி எப்பா ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, சிறீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவீந்திர சில்வாவுக்கும் மேலதிக பதவிகள் வழங்கி கௌரவித்துள்ளார் கோத்தபாயா, தற்போதைய இராணுவத்தளபதிக்கு மேலதிகமாக பாதுகாப்பு படையினரின் பிரதம அதிகாரி பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு நிறைவடைந்த போரின் போது அதிகளவான போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை மேற்கொண்ட சில்வா பெருமளவான அப்பாவிப் பொது மக்களையும் படுகொலை செய்திருந்தார். அவருக்கு எதிராக அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் குரல் எழுப்பி வருகையில் சிறீலங்கா அரசு தொடர்ந்து அவரை கௌரவித்து வருகின்றது.

# அரசியல் கைதி மகேந்திரனின் மரணத்தைப் போல எமது பிள்ளைகளும் மரணமடைவதற்கு முன்னர் நீதி வேண்டும்




வவுனியாவில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தங்களின் பிள்ளைகள், சகோதரர்கள் தாங்கள் இறப்பதற்கு முன் தங்கள் கைகளில் தேவையென கூறி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக கடந்த 1050 நாட்களாக போராடி வரும் காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவினர்களாலேயே குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று மதியம் 12.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் எமக்கு வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து சுழற்சி முறையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றைய தினம் அதனை நினைவு கூர்ந்ததுடன் இவ்வருடம் முதலாம் திகதி 27 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்து கொழும்பு சிறையில் தமிழ் அரசியல் கைதியான செல்லப்பிள்ளை மகேந்திரன் மரணமடைந்துள்ளார். அவரிற்கு அஞ்சலி செலுத்தி மெழுகுவர்த்தியேற்றி ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்ததுடன் இவரிற்கு நடந்தது போல் நடக்காது எமது பிள்ளைகள் எமக்கு கிடைக்க வேண்டுமென கோரி காணாமற்போன உறவுகள் தமது பிள்ளைகளுடன் ஒன்றிணைந்து இப்போராட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தை மேற்கொண்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பலப்படுத்த சிறிலங்கா அரசு திட்டம்

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டம் மாற்றங்கள் எதுவும் இன்றி தொடர்ந்து இருக்கும் அல்லது தேவை ஏற்பட்டால் சிறிலங்கா அரசு அதனைப் பலப்படுத்தும் என சிறிலங்கா அமைச்சர் பந்துல குணவர்த்தனா நேற்று (04) தெரிவித்துள்ளார்.




இந்த சட்டம் மிகவும் பலம் வாய்ந்தது. அதன் மூலமே விடுதலைப்புலிகளை தோற்கடித்தோம். புனித ஞாயிறு தாக்குதலின் பின்னரும் இந்த சட்டத்தின் மூலமே நிலமைகளைக் கட்டுப்படுத்தினோம். எனவே எதிர்காலத்தில் தாக்குதல்களைத் தடுப்பதற்காக நாம் அதனை பலப்படுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சிறீலங்காவில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூலம் படையினர் அதிக அதிகாரங்களை பெறுவதாகவும், அதன் மூலம் அவர்கள் பெருமளவான மனித உரிமை மீறல்களை சிறுபான்மை மக்களுக்கு எதிராக மேற்கொண்டு வருவதாகவும் அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

பெருமளவான தமிழ் மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதற்கும், பெருமளவான அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், அரசியல் கைதிகளாக அப்பாவி தமிழர்கள் சிறையில் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்தற்கும் இந்த சட்டமே காரணமாகும்.

# தரமற்ற சிறீலங்கா வான்படை விமானங்கள் பொது மக்கள் உயிருக்கு ஆபத்து



கடந்த வெள்ளிக்கிழமை(03) சிறிலங்காவின் கப்புத்தளை பகுதியில் சிறிலங்காவின் வான் படையின் Y-12 விமானம் வீழ்ந்து நொருங்கிய சம்பவமானது சிறீலங்கா வான்படை மற்றும் தனியார் வானூர்தி சேவைகளைப் பயன்படுத்தும் மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகும் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சீனாவில் தயாரிக்கப்பட்ட கெர்பியன் Y-12 மற்றும் சியான் M.A 60 ரக விமானங்களை சிறீலங்கா வான்படையினர் பயன்படுத்தும் போதும், அவற்றை பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளாது பொது மக்களுக்கான சேவைகளுக்கும் பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை வீழ்ந்து நொருங்கிய விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வீழ்ந்துள்ளதாக சிறீலங்கா வான்படை தெரிவித்தாலும், அது பறப்பதற்கு தகுதியற்ற விமானம் என்ற தகவல்கள் தற்போது

தொடர்ச்சி 10ம் பக்கம்

# மேற்குலகத்திற்கு கோத்தபாயா வழங்கப்போகும்

## அடுத்த தோல்வி

சிறீலங்காவின் புதிய அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்ச 19ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றுவதுதொடர்பில் அதிக அக்கறை காண்பித்து வருவதாகவும், அதற்காகவே தன்னை முன்னைய அரச தலைவர்களில் இருந்து வேறுபட்ட அரசியல் தலைவராகவும், தூய பௌத்த சிங்களவராகவும் காண்பிக்க முற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.



புதிய அரச தலைவராக பதவியேற்ற பின்னர் மிகவும் வினைத்திறன் உள்ள அரசாக தமது அரசைக் காண்பிப்பதில் கோத்தபாயா அதிக அக்கறை காண்பித்துவருகின்றார்.



ஊழல்களை இல்லாது செய்யப் போவதாக தெரிவித்துள்ள அவர், முன்னறிவித்தல்கள்இன்றி அரச அலுவலகங்களுக்கு பயணங்களை மேற்கொண்டு வருகின்றார். இந்த வாரம் நாடாளுமன்றத்திற்கு பயணம் மேற்கொண்ட அவர் பாதுகாப்பு வாகனங்கள் இன்றி தனது குண்டு துளைக்காத காரில் பயணம் செய்திருந்தார்.

இந்த முயற்சிகள் எல்லாம் பிரதமருக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் 19ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது செய்வதற்கான முயற்சிகள் ஆகும் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

2015ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவை அரச தலைவர் பதவியில் இருந்து அகற்றிய பின்னர் மேற்குலகத்தின் உதவியுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசு கொண்டு வந்ததே 19ஆவது திருத்தச் சட்டம்.

இந்த சட்டத்தில் உள்ள பலவீனங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்காக 2018ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச மூலம் இந்தியா மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்திருந்தது.

இந்த நிலையில் தற்போது அதனை அகற்றுவதற்கான முழு முயற்சிகளையும் புதிய அரசு மேற்கொண்டு வருகின்றது.

கடந்த அரச தலைவர் தேர்தலில் கோத்தபாயா பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை அளவு வாக்குகளை அவரின் கட்சி எதிர்வரும் ஏப்பிரலில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பெறுமாக இருந்தால் அவர்கள் 120 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறமுடியும்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட சிறீலங்கா நாடாளுமன்றத்தில் 150 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுகள் இருந்தால் மட்டுமே மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற முடியும்.

எனவே தான் தற்போதைய அரசு மிகவும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது என்பது மேற்குலகம் சார்ந்த கொள்கைகளைக் கொண்ட சிங்களக் கட்சிகளுக்கு கோத்தபாய அரசு வழங்கும் தோல்வியாகும் என கொழும்பைத் தளமாகக் கொண்ட அரசியல் அவதானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கோத்தபாயவை எதிர்க்கும் அளவுக்கு பலமாக ஐக்கிய தேசியக் கட்சி இல்லை எனவும், ரணில் விக்கிரமசிங்காவின் பதவி மோகத்தால் கட்சி மிகப் பெரும் உள்ளக பிரச்சனைகளில் சிக்கித் தவிப்பதாகவும். அந்த கட்சி தலையற்ற கோழி போல ஓடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் பெரும்பான்மையை பெறும் சிங்களக் கட்சிகளின் வரலாறுகள் நேர்த்தியாக இருந்தது இல்லை. மிகப்பெரும் பெரும்பான்மையை பெற்ற சிறீமாவோ பண்டாரநாயக்கா, அதன் பின்னர் சரிவையே சந்தித்தார், ஜே.ஆர் ஜெயவர்த்தானாவும் தேர்தல்களை நிறுத்தி திருத்தச் சட்டங்களை கொண்டு வருவதில் தீவிரமாகச் செயற்பட்டார், மகிந்த 2010இல் பெற்ற பெரும்பான்மையும் அவருக்கு சரிவைத் தான் பின்னர் கொடுத்தது.

எனவே கோத்தபாய மற்றுமொரு ஜே.ஆர் ஜெயவர்த்தனாவாக மாறுவாரா என்ற கேள்விகள் எழுந்துள்ளது.

## இலக்கு — தமிழர்களின் 75வருடக் கோரிக்கையை 2020 இல் பிரித்தானியா நிறைவேற்றுமா?

2020இல் பிரித்தானியா, பாராளுமன்றத்தில் 80 மேலதிக ஆசனங்களைக் கொண்டுள்ள பலம்பொருந்திய கொன்சர்வேடிவ் அரசாங்க ஆட்சிக்குள் காலடி எடுத்து வைக்கின்றது. இந்த பெருவெற்றிக்குக் காரணமானவர் என்ற பெருமையுடன் பிரித்தானியாவின் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அவர்கள் 2020இல் உலகால் வரவேற்கப்படுகின்றார். பிரித்தானியாவின் இனத்துவச் சிறுபான்மையினர்களில் ஒருவராகிய பிரிட்டிஸ் தமிழர்களாகிய நாமும் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்களைக் கூறி வரவேற்பதில் பெருமை அடைகின்றோம்.

இந்த பெருவெற்றிக்குக் காரணம் பிரித்தானிய மக்கள் 1975ம் ஆண்டில் 67.2 வீத வாக்குகளால் 01.01.1973 முதல் ஐரோப்பிய பொதுச் சந்தையை உள்ளடக்கிய ஐரோப்பிய மக்கள் சமுதாயத்தில் இணைந்தமைக்கு அளித்த குடியொப்பத்தை, 2016இல் 51.9 வீத வாக்குகளைப் பெற்ற குடியொப்பத்தால் மாற்றி அமைத்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து தாங்கள் விலக விரும்புவதாக அறிவித்த சனநாயக முடிவை, கொன்சர்வேடிவ் கட்சி நிறைவேற்றும் என பிரித்தானிய மக்கள் கொண்ட நம்பிக்கையே என்பது பகிரங்கமான ஒன்று. இது ஒரு மக்களுக்கு சனநாயக ரீதியாக ஒரு அரசியல் கட்டமைப்பில் இணைவதற்கும் விலகுவதற்கும் உரிமையுண்டு என்ற சனநாயகத் தத்துவத்தின் அடிப்படைக்கான வெற்றியாகப் போற்றப்படுகிறது.

அதே சனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் பிரித்தானியா தங்களின் காலனித்துவ அரசாங்கமாக இருந்த 01.09.1944இல் இலங்கையின் தமிழ் பேசும் பகுதியினை தமிழ் இலங்கை (Tamil Ceylon) என்னும் தனியான அலகாக அறிவிக்கும்படி பிரித்தானிய அரசிடம் கோரிக்கை விடுத்தனர். தமிழ் இலங்கை (Tamil Ceylon) தமிழர்கள் நன்கு நிறுவப்பட்ட தனியான எல்லைகளையும் ஏறத்தாழ 1500 ஆண்டு காலத்திற்கும் முற்பட்ட தனியான வரலாறு, நாகரிகம், அரசியல், ஆட்சி என்பவற்றைக் கொண்டவர்கள். அவர்கள் இலங்கையின் மற்றைய பகுதிகளில் வாழும் மக்களை விட வரலாற்றில், இனத்துவத்தில், மொழியில், சமயத்தில், கலாச்சாரத்தில், பழக்கவழக்கத்தில், அரசியலில், நாகரிகத்தில், வாழ்க்கை இலட்சியங்களில் முற்றிலும் வேறுபட்டவர்கள். இதனால் அவர்கள் வாழும் தமிழ் இலங்கை தனியான அலகாகத் தன்னைக் கட்டமைத்துள்ளது. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட இந்தத் தமிழ் இலங்கை தனியான அரசியல் அலகாக உலகைப் பாதுகாக்கும் பிரித்தானிய தேசத்தால் உருவாக்கப்படல் அவசியம்" என பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரினர். டாக்டர் எஸ் பொன்னையா அவர்கள் பிரித்தானியக் காலனித்துவ அரசிடம் இந்தக் கோரிக்கையை 01.09.1944இல் முன்வைத்தமையைக் காலனித்துவ அலுவலகத்தின் கோப்பு இலக்கம் CO 54/986/7,no.35 உறுதி செய்கிறது.

ஆயினும் 26.07.1944இல் பிரித்தானியப் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த லேபர் கட்சி தமிழர்களின் கோரிக்கையை அலட்சியம் செய்து 11.09.1944 இல் தனது அமைச்சரவையில் சோல்பரி அறிக்கையை ஏற்றுப் போதிய அரசியலமைப்புப் பாதுகாப்புகள் இலங்கைத் தமிழர்களுக்கு இல்லாத சிங்கள பௌத்த பேரினவாத பெரும்பான்மை ஆட்சி தோன்றுவதை அனுமதித்து இன்று வரையான இலங்கைத் தமிழர்களின் இனஅழிப்புகள் இனத்துடைப்புகளுடனான சோக வரலாற்றுக்கு வித்திட்டது.

1973இல் பிரித்தானியாவுக்கு லேபர் கட்சி செய்த தவறென மக்கள் கருதும் ஐரோப்பிய ஒன்றிய இணைப்பில் இருந்து விலகி மக்களின் சனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் பிரித்தானியப் பிரதமர் அதிஉயர் மதிப்புக்குரிய பொரிஸ் ஜோன்சன் அவர்கள், 1944இல் ஈழத்தமிழர்களுக்கு லேபர் கட்சி செய்த தவறால் இன்று வரை அவர்கள் இன அழிப்புகளையும் இனத்துடைப்புகளையும் காலத்துக்குக் காலம் சந்தித்து உலகெங்கும் அகதிகளாகித் துன்புறும் அவல நிலையையும் கவனத்தில் எடுத்து, உரிய நடவடிக்கைகள் மூலம் அவர்கள் 75 ஆண்டுகளாக பிரித்தானியாவிடம் விடுத்து வரும் இலங்கையில் தங்களுக்கான பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கான கோரிக்கையை, 2020இல் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையுடன் 2020ஐ பிரிட்டிஸ் தமிழர்கள் எதிர்கொள்கின்றனர்.

**- ஆசிரியர்**

# 39 வருடங்கள் பழமையான விண்ணாங்கம்பிட்டி

# தமிழ் கிராமம் பறிபோகும்

# அபாயநிலை..!

**யு**த்தம் நடைபெற்ற போதும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்குப் பகுதியில் பல தமிழ் கிராமங்கள் இராணு வத்தினரால் சுவீகரிக்கப்பட்டன. அதே போல் இன விகிதா சாரத்தை குழப்பும் வகையிலான திட்டமிட்ட குடியேற்றங்கள் சிலவும் இடம்பெற்றதுடன், தற்போதும் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

இந்நிலையில் வடக்கு, கிழக்கில் இருக் கும் தமிழ் அரசியல் தலைமைகளும், மக்கள் பிரதிநிதிகளும் இதனைத் தடுப்பதற்காக பல்வேறு வகையில் குரல்களை கொடுத்து வருகின்றனர். ஆனால் இங்கு சத்தமில்லாத வகையில் தமிழ் மக்களின் எல்லையோரக் கிராமங்கள் சில பறி போகும் அபாய நிலையில் உள்ளது. இதனைத் தடுக்க மக்கள் முன்வந்து போராடுகின்ற போதும் அரசியல் தலைமைகள் அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்பதே வேதனையான விடயம்.

கடந்த 39 வருடங்களாக மக்கள் வாழாத நிலையில் வனங்களாக மாறியுள்ள எல்லையோர கிராமமான விண்ணாங்கம்பிட்டி



மற்றும் அதனை அண்டியுள்ள தமிழ் கிராமங்களின் ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் மிகுதியும் பறிபோகும் நிலையில் உள்ளது.

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவின் பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பகுதிக்கு சொந்தமான நிலங் களே இவை. முல்லைத்தீவு மற்றும் சிங்கள குடியேற்றங்களின் எல்லைக் கிராமங்களாகவும் இவை இருக்கின்றன. பட்டிகுடியிருப்பு கிராம அலுவலர் பிரிவு முன்னர் துவரங்குளம், பட்டிக்குடியிருப்பு, பாவற்காய்குளம், தனிக் கல்லு, குஞ்சுமாரி, சேனபப்ர்குளம், பள்ளம்புலவு, விண்ணாங்கம்பிட்டி, சூரியன் ஆறு, அரிய கொண்டான் சோலை என ஏறத்தாழ 19,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டிருந்தது.

ஆனால் இன்று துவரங்குளம், பாவற்காய் குளம், பட்டிக்குடியிருப்பு என்பவற்றை உள்ளட க்கிய வெறும் 500 சதுர கிலோ மீற்றர் வரையிலான பகுதியே தமிழ் மக்கள் வாழும் பகுதியாகவுள்ளது.

இதனை அண்டியுள்ள, சூரியன் ஆறு, வெலி ஓயா என்ற பெயரிலும் அதனை அண்டிய அரிய கொண்டான் சோலை, சிலோன் தியட்டர், ஆனந்தாபாம், டொலர் பாம், ஓதியமலை என பெருமளவு நிலப்பரப்பு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும் திட்டமிட்ட குடியேற்றத்திற்கு உட்பட்டதாகவும் உள்ளது.

வயல் நிலங்கள், நீர்பாசன குளங்கள், வீடுகள் என்பவற்றை உள்ளடக்கி இருந்த விண்ணாங்கம் பிட்டி, தனிக்கல்லு, குஞ்சுமாரி, சேனபப்ர்குளம், பள்ளம் புலவு போன்ற தமிழ் கிராமங்களின் நிலை இன்று....???

இக்கிராமங்கள், மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் மறைந்து அடர்ந்த வனங்களாக வும், யானைகளின் வாழ்விடமாகவும் மாறி யுள்ளது. எனினும் இப் பகுதியில் மக்கள் குடி யிருந்த காலப்பகுதியில் அமைக்கப்பட்ட கிணறுகளின் எஞ்சங்களே மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான ஒரே அடையாளம்.

வனப் பிரதேசமாகவுள்ள இந்தக் காணிகள் 1972ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயிர் செய்கை நடவடிக்கைகளுக்காக அரசங்கத்தால் மக்களுக்கு வழங்கப்பட்டவை. அதற்கு ஆதாரமாக மக்களிடம் காணி உறுதிப் பத்திரங்களும் உள்ளன.

இங்கு 24 குடும்பங்கள் முன்னர் வீடுகள் அமைத்து குடியிருந்துள்ளார்கள். மக்களால் இங்கு அமைக்கப்பட்ட நிரந்தரக் கிணறுகள் பலவும் காடுகளுக்கு மத்தியில் சிதைவடைந்த நிலையில் இன்றும் உள்ளன.

**கோ.ரூபகாந்**

1984 ஆம் ஆண்டு இறுதியில் இடம்பெற்ற ஓதியமலைப் படுகொலைச் சம்பவத்தையடுத்து, எல்லையோர இம் மக்கள் இடம் பெயர்ந்தனர். அன்று முதல் யுத்தம் காரணமாக பல தடவை இடம் பெயர்ந்த இம்மக்கள் இங்கு சென்று வசிக்க முடியாத அச்சநிலையே இன்றும் காணப்படுகிறது. இறுதி யுத்தம் வரை முகம் கொடுத்து கையில் ஒரு பையுடன் 2010 ஆண்டுக்கு பின்னர் பட்டிக்



குடியிருப்பு மக்கள் குடியேற்றப்பட்டனர். இருப் பினும் விண்ணாங்கப்பிட்டியும் அதனை அண்டிய சில தமிழ் கிராமங்களும் குடியேற்றப்படவில்லை. அவை 35 வருட பாவனையற்ற நிலையில் வனங்க ளாகவே உள்ளன. 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியேறிய போது விண்ணாங்கம்பிட்டியை அண்டியுள்ள தனிக்கல்லுப் பகுதியில் உள்ள 250 ஏக்கர் விவசாய நிலங்கள் பெரும்பான்மை இனத்தவரால் விவசாய நடவடிக்கைக்காக பயன் படுத்தப்பட்டது.

இருப்பினும் தமது உறுதிப் பத்திரங்களை காட்டி நீண்டகால போராட்டத்திற்கு பின்னர் இந்தக் காணி மீண்டும் தமிழ் மக்களிடம் வந்துள் ளது. அதனைத் தொடர்ந்தும் பாதுகாக்க முடியுமா என்பது இங்குள்ள மக்களின் ஆதங்கமாகவுள்ளது.

விவசாயத்தை அடிப்படையாக கொண்ட இம் மக்கள் இங்குள்ள தமது காணிகளில் உள்ள பெருங்காடுகளை அழித்து பயன்படுத்தக் கூடிய பொருளாதார வளம் அற்றவர்களாகவே உள்ளனர். அதனை விட இவர்களின் குடிமனை இருந்த காடுகளில் வசிக் கும் யானைகளின் அச்சுறுத்தலும் தொடர்கிறது..

தற்போது உள்ள குடிமனைகளுக்குள் புகும் யானைகள் இவர்களின் வீடுகள், பயிர் நிலங்களை சேதம் விளைவிப்பதும் மக்கள் திர ண்டு யானையை விரட்டுவதும் இவர்களது வாழ் வில் பழகிப் போய்விட்ட விடயமாகியுள்ளது. மாலை 4 மணிக்கு பிறகு தினமும் யானைகளின் நடமாட்டத்தையே வீதிகளில் காணமுடிகிறது.

இந்நிலையில் எல்லையோர கிராமத்தை பாதுகாக்கும் நோக்கிலும், காடுகளை அழித்து தமது காணிகளை மீட்கும் நோக்கிலும் தமது காணிகளை ஒப்பந்த அடிப்படையில் மூங்கில் செய்கைக்காக தனிநபர் ஒருவரிடம் ஒப்படைக்க மக்கள் முன்வந்திருந்தனர்.

அதற்கான ஆரம்ப வேலைகள் பலவும் முடிவடைந்தும் விட்டன. இதில்



மக்கள் காணிகளுக்குள் இருந்த சில காடுகள் அழிக்கப்பட்டு துப்பரவும் செய்யப்பட்டு விட்டன. இதன் போது அங்கு வந்த வன இலாகா அதிகாரிகள் அதனை காடுகள் எனவும் தமது காணி எனவும் கூறியிருந்தனர். இருப்பினும் மக்கள் தமது உறுதிப் பத்திரங்களை காட்டி தமது காணிகளை அடையாளப்படுத்தியிருந்தனர்.

அதன் பின்னர் குறித்த பகுதியில் மூங்கில் செய்கை செய்ய முடியாது எனவும், அதற்கு



அனுமதி வழங்க முடியாது எனவும் முன்பிருந்த வடமாகாண விவசாய அமைச்சரால் தடுத்து நிறுத் தப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

மன்னாரில் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் மூங்கில் செய்கை இடம் பெறுகிறது. அது தடுக்கப்படவில்லை. ஆனால் எமது காணிகளை பாதுகாப்பதற்காகவும், காடுகளை அழித்து எமது காணிகளை மீட்டு இப்பகுதி மக்களின்

வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் மூங்கில் செய்கையை செய்ய முயன்றோம் ஆனால் தடுக்கிறார்கள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்




# இதுதான் இறுதி மரணமாக இருக்குமா?

கொழும்பிலிருந்து **அகிலன்**

*18 வயதில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் தனது வாழ்நாளை சிறைச்சாலைக்குள் தொலைத்து விட்ட நிலையில் 46ஆவது வயதில் மரணமடைந்திருக்கின்றார். புதுவருட தினத்தன்று கொழும்பு, மகசின் சிறைச்சாலையில் அவர் இறந்த செய்தி அதிர்ச்சியளிப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. 27 வருடகால சிறைவாசத்தில் பரிசாகக் கிடைத்த நோய்களுக்கு எதிராகப் போராடி அதில் தோல்வியடைந்த நிலையில் அவர் மரணமடைந்த போது, அவருக்கென யாரும் இருக்கவில்லை. யாருமற்ற ஒரு அனாதையாகவே அவர் மரணமடைந்திருக்கின்றார்.*

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகி வீட்டில் இருந்த போது, கிழக்கில் 600 பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவத்தில் சந்தேக நபராக 1993இல் இவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். மட்டக்களப்பு, மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த செல்லப்பிள்ளை மகேந்திரன் என்ற நபரே இவ்வாறு 27 வருடங்களை சிறையில் தொலைத்து விட்ட நிலையில் உயிரிழந்திருக்கின்றார். இவரது மரணம் சிறைச்சாலையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியிருக்கின்றது. அதேவேளையில், பலமான செய்தி ஒன்றையும் சொல்லிச் சென்றிருக்கின்றது. இவ்வாறான மரணங்கள் இனியும் தொடருமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவருக்கு சிறைச்சாலையில் சீரான மருத்துவ வசதிகள் இருக்கவில்லை. பொதுவாக சிறைச்சாலைகளில் காணப்படும் நிலை இதுதான். அதிலும் தமிழ்க் கைதி என்றால், கவனிப்பு எப்படியிருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். கடந்த சில மாதங்களாக கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், இரண்டு வாரங்களுக்கு முன் மகசீன் சிறையில் இருந்து வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார் எனவும், பின்னர் அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதிகளவு காலம் சிறையில் இருந்த மூத்த அரசியல் கைதியாக இவர் இருந்துள்ளார். இவரது பெற்றோர் ஆரம்ப காலங்களில் இவரை வந்து பார்வையிட்ட போதும் பின்னர் அவர்களும் மகனின் நினைவுகளுடன் மரணித்து விட்டனர். அந்த மரணச் சடங்குகளுக்குக் கூட சென்று வருவதற்கு மகேந்திரனுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இதன் பின்னர் இவரை எவரும் சிறைச்சாலைக்கு வந்து பார்வையிடுவது கிடையாது. நோய்களுடன் தனிமையும் அவரை மோசமாகப் பாதித்திருக்க வேண்டும். பொலிஸார் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் இவருக்கு ஒரு ஆயுள் தண்டனையும், 70 வருடங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

சிறைத் தண்டனை என்பது கைதிகளைத் திருத்துவதற்காக வழங்கப்படுவது. புனர்வாழ்வின் மூலம் மறுவாழ்வை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதுதான் சிறைத் தண்டனையின் நோக்கம். அவர்களை உடல் - உள ரீதியில் நோயாளிகளாக்கி மரணத்தைக் கொடுப்பதற்காக சிறைத் தண்டனை வழங்கப்படுவதில்லை. இலங்கை போன்ற நாடுகளில் சிறைத் தண்டனை என்பது எத்தனை கைதிகளைத் திருத்தியிருக்கின்றது? எத்தனை கைதிகளுக்கு மறுவாழ்வைக் கொடுத்திருக்கின்றது?

பொதுவாக மரண தண்டனைக் கைதிகள்கூட, அது பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு, 20 அல்லது 21 வருடங்களில் விடுதலை செய்யப்பட்டு விடுகின்றார்கள். இங்கு 18 வயதில் கைதான மகேந்திரன் 27 வருங்களைச் சிறைக் கூண்டுக்குள் தொலைத்திருக்கின்றார். நான்கு சுவர்களுக்குள் அவரது வாழ்க்கை முடங்கிப் போயிருக்கின்றது. வாழ்க்கையின் முக்கியமான - இளமையான - இனிமையான 27 வருட காலத்தை இழந்த சோகம் கூட அவரது நோய்களுக்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

இரண்டு விடயங்களை இதில் கவனிக்க வேண்டும். ஒன்று - 18 வயதில் செய்த ஒரு குற்றத்துக்கு இந்தளவு கொடூரமான தண்டனை அவசியமா? என்பது. 18 வயது என்பது மேஜராகும் வயது. அதனால்தான் வழக்கைப் பதிவு செய்யும் போது அவரது வயது 19 எனக் குறிப்பிடப்பட்டதாகத் தெரிகின்றது. 18 வயது என்றால், இந்தளவு கொடூரமான தண்டனையைப் பெற்றுக் கொடுக்க முடியாது என்பதால் வயதைக் கூட பொலிஸார் மாற்றியிருக்கின்றார்கள். இந்த வயதில் செய்திருக்கக் கூடிய ஒரு குற்றம் சுய அறிவால் செய்யப்பட்டதா அல்லது தூண்டுதலால் செய்யப்பட்டதா என ஆராயப்பட்டிருக்க வேண்டும்.

இரண்டாவது - கிழக்கு மாகாணத்தில் அப்போது இடம்பெற்ற அந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பாக இருந்ததாகச் சொல்லப்படுபவர் பின்னர் அரசாங்கத்தில் இணைந்து பிரதி அமைச்சராகவும் இருந்திருக்கின்றார். பிரதான கட்சி ஒன்றின் பிரதித் தலைவராகவும் இருந்திருக்கின்றார். அவர் ஒரு சுதந்திர புருஷராக இராணுவப் பாதுகாப்புடன் நடமாடித் திரியும் போது, அதில் நேரடியாகச் சம்பந்தப்படாத இளைஞர் ஒருவர் கைதாகி இந்தளவு கொடூர தண்டனையையும் பெற்று சிறைக்குள்ளேயே மரணமடைந்திருப்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?


(XV) சித்திரவதைகளுக்கு உட்படுத்தியவர்களின் பெயர்கள்:

(XVI) சித்திரவதைகளுக்கு உட்படுத்தியவர்களின் இலக்கங்கள்:
தெரியாது

(XVII) சித்திரவதைகளின் காரணமாக உங்களின் கண் முன்னால் எவராவது கொலை செய்யப்பட்டனரா?
ஆம்

பெயர்: ........ முகவரி: ........

1993-09-27 இருந்து 1994-01-28 ம் திகதி வரை மட்டக்களப்பு ...

போர் முடிவுக்கு வந்து பத்து வருடங்களும் கடந்து விட்டது. அரசியல் ரீதியான காரணங்களுக்காக கைதாகி தடுப்பில் உள்ளவர்களின் விவகாரம் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய அவசியம் இச்சம்பவத்தினால் மேலும் அழுத்தி உணர்த்தப்பட்டிருக்கின்றது. அரசியல் கைதிகள் பல வகையாக இருக்கின்றார்கள். சிலருக்கு வழக்கோ விசாரணைகளோ இல்லை. வேறு சிலர் விடுதலைப்புலிகளுக்கு உதவியவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைதாகி, குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் வாடுகின்றார்கள். ஒப்புதல் வாக்குமூலம் கடுமையான சித்திர வதைகளின் மூலம் பெறப்படும் ஒன்று. மரணமடைந்த மகேந்திரனும் அவ்வாறான ஒருவர் தான். அவரும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் தண்டனை விதிக்கப்பட்டவர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து பல வருட காலமாகவே பேசப்பட்டு வருகின்றது. ஜே.வி.பி. கிளர்ச்சியில் ஈடுபட்ட அனைவரும், கிளர்ச்சி முறியடிக்கப்பட்ட சிலமாதங்களிலேயே விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. ஜனநாயக அரசியலில் ஈடுபட அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அவர்களும் விடுதலைப்புலிகளைப் போல ஆயுதமேந்தி அரசுக்கு எதிரான போராட்டத்தை நடத்தியவர்கள்தான். தெருத்தெருவாக பலர் கொல்லப்பட்டு வீசப்பட்டமைக்கு காரணமாக இருந்தவர்கள். பொது மன்னிப்பில் கூட இனவாதம் பார்க்கப்படுகின்றது.

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் இழுபறிப்படுவதற்குகாரணம்யார்? தமிழ்கட்சிகள் இணக்க அரசியலைச் செய்தும், முரண்பாட்டு அரசியல் செய்தும் கைதிகளின் விடுதலை குறித்து பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை. கடந்த ஐந்து வருட காலத்தில் மைத்திரி - ரணில் அரசைப் பாதுகாப்பதில் பிரதான பங்கை வகித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான். கைதிகளின் விடுதலையைச் சாத்தியமாக்கியிருக்கக்கூடிய பல வாய்ப்புக்கள் அவர்களுக்கு இருந்தது. ஆனால், ரணிலுக்கு சங்கடத்தைக் கொடுக்கக் கூடாது என்பதால் அவர்கள் மௌனமாக இருந்தார்கள்.


தொடர்ச்சி 10ம் பக்கம்



# கால் நூற்றாண்டு அரசியல் கைதி சிறையில் சாகடிக்கப்பட்டார்

**1974**ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18ஆம் திகதி மட்டக்களப்பிலுள்ள மொறக் கொட்டாஞ்சேனை கிராமத்தில் ஏழு பிள்ளைகளில் ஒருவராக மகேந்திரன் பிறந்தார்.

இளையோரை வீட்டினுள்ளேயே பூட்டி வைத்திருந்த காலமது. அப்போது மகேந்திரன் பதின்மவயதினராக இருந்தார். 1990இல் விடுதலைப்புலிகள் அவரை அமைப்பில் இணைத்


1

உறவுகளின் உரிமை பேணும் அமைப்பு

பயங்கரவாத தடைச்சடம் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோர் முறைப்பாட்டு படிவம்

1. முறைப்பாட்டாளர் முழு பெயர் : ...........................
2. பிறப்பிடம்: ... தேவாலய வீதி, மொறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு ......
3. நிரந்தர முகவரி : தேவாலய வீதி, மொறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு ......
4. தற்காலிக முகவரி .(இடம் பெயர்ந்திருந்தால் முகவரி) : ...........................

அவருடைய தந்தை சீவல் தொழில் செய்பவராக இருந்த போதும், அவரால் அத் தொழிலை செய்ய முடியாதிருந்தது. இதனால் அவர் குடும்பம் ஏழ்மையிலேயே வாழ்ந்தது. குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்தும் எண்ணத்துடன் குடும்பம் வந்தாறுமூலைக்கு இடம் பெயர்ந்தது.

தார்கள். இரண்டு வருடங்கள் விடுதலைப்புலிகள் பாசறையில் அவர் தொட்டாட்டு வேலைகள் மட்டுமே செய்தார். இரண்டு வருடங்களில் பாச றையிலிருந்து தப்பியோடி விட்டார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து தப்பியோடி சிலமாதங்களில் ஒரு பெண்ணை காதலித்து மணந்து கொண்டார். இப்போது

# படுகொலைகளின் முக்கிய சாட்சிகளில் இன்னுமொன்று அழிக்கப்பட்டு விட்டது.

ஏழ்மை காரணமாக மகேந்திரனை தவிர ஏனைய பிள்ளைகள் எவரும் பள்ளிக்கூடம் போகவில்லை. மகேந்திரன் பத்து வயது வரை பள்ளிக்கூடம் சென்றார். இருந்தும் அவருடைய எழுத்தறிவும் குறைவாகவே இருந்துள்ளது. மேலே குறிப்பிட்ட வாக்குமூலத்தில் தான் படித்த பள்ளிக்கூடத்தின் பெயர் நினைவில்லை என்றே அவர் சொன்னார். அவர் பிறந்த திகதியையும் தவறாகவே அதில் சொல்லியிருக்கிறார்.


போர் காரணமாகவும் சிறிலங்கா இரா ணுவத்தின் கெடுபிடிகள் காரணமாகவும் குடும் பங்கள்

அவருடைய தாய் தந்தையர் குடும்பம் மீண்டும் அவர்களின் சொந்த இடமான மொறக்கொட்டாஞ்சேனைக்கு சென்று விட்டா ர்கள். மகேந்திரன் அவருடைய மனைவி யின் குடும்பத்துடன் வந்தாறுமூலையில் தங்கி யிருந்தார். அவர்கள் தம்பதிகளாக இணைந்திருந்து மூன்று நாட்கள்தான். அப்போது இராணுவம் நடத்திய ஒரு சுற்றிவளைப்பில் மகேந்திரனும் கைதாகினார்.

அன்றைய காலத்தில் இவ்வாறான கைது கள் தலையாட்டிகள் அடையாளம் காட்டுவதன் மூலமே நடத்தப்படும். மகேந்திரனும் அவ்வாறு தான் கைது செய்யப்பட்டார். இவையெல்லாம் மகேந்திரன் விடுதலைப்புலிகள் பாசறையில் இருந்து தப்பியோடி வந்து நான்கு மாதங்களுக்குள் நடந்தது.

2006ஆம் ஆண்டு சிவநேசன் ஐயாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில் எவ்வாறு அவர் சித்திரவதை செய்யப்பட்டார் என்பதை விபரித்திருக்கிறார்.

சிறையில் மகேந்திரன் பூட்ஸ் காலால் உதைக்கப்பட்டதால் அவருடைய முகம் வீங்கி யிருந்ததாக சொல்லியிருக்கிறார். அவருடைய கைகள் பின்னால் கட்டப்பட்டு தலையை தண்ணீ ருக்குள் பல நிமிடங்கள் அமுத்தி வைத்தார்கள். அவர் தலை பொலித்தீன் பையால் மூடப்பட்டு அது அவருடைய கழுத்தை சுற்றி இறுக்கப்பட்டது. அவர் நிர்வாணமாக்கப்பட்டு அவருடைய நெஞ்சில் கொட்டாந்தடியால் அடித்தார்கள். இராணுவத்தினரின் உடைகளை சுத்தம் செய்யவும் அவர்களுடைய பூட்சுகளை மினுக்கவும் அவருக்கு கட்டளை கொடுக்கப்பட்டது. இவ்வாறான கொடிய சித்திரவதைகள் மூலம் அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தை வைத்தே அவருக்கு ஆயுள் தண்டனையும் மேலதிகமாக 70 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் கொடுக்கப்பட்டிருந்தது.


(XII) எத்தகைய சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டீர்கள்?
(XIII) அநாகரிகமான முறையில் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டீர்களா? ... ஆம் ...
(XIV) அவ்வாறாயின் எவ்வாறான சித்திரவதைகள்?
(XV) சித்திரவதைகளுக்கு உட்படுத்தியவர்களின் பெயர்கள்:
(XVI) சித்திரவதைகளுக்கு உட்படுத்தியவர்களின் இலக்கங்கள்: ... தெரியாது ...

மகேந்திரனின் குடும்பத்திடம் நீதிமன்றத் தால் கொடுக்கப்பட்ட ஒரு குறிப்பு புத்தகம் இருக்கிறது. அதில் அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனைகள் பதியப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன குற்றத்திற்காக அவருக்கு தண் டனை கொடுக்கப்பட்டது என்று எதுவும் பதியப்படவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் மகேந்திரனின் குடும்பத்தினுடைய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான வியாழேந்திரன் மகேந்திரனின் நிலமையை பற்றி எழுதச் சொல்லி பிபிசி தமிழ் ஊடகவியலாளரை கேட்டிருந்தார். பிபிசியும் குடும்பத்தை விசாரித்து மகேந்திரனின் கதையை செய்தியாக வெளியிட்டது. மகேந்திரனின் நிலமை பற்றி நாடாளுமன்றத்திலும் வியாழேந்திரன் உரையாற்றினார். தொடர்ந்து மட்டக்களப்பு பொலிசார் மகேந்திரனின் குடும்பத்திடம் சென்று கதைத்தார்கள். மகேந்திரன் விடுதலை செய்யப்பட்டால் அவர் தங்குவதற்கு இடமுண்டா என்று விசாரித்ததாக குடும்பத்தவர்கள் சொன்னார் கள். அப்போதைய சனாதிபதி மைத்திரிபால சிறிசேனா 100 கைதிகளுக்கு விடுதலை கொடுக்க எண்ணுவதாகவும் மகேந்திரனும் அதில் ஒருவர் என்றும் பொலிசார் குடும்பத்திற்கு சொன்னார்கள்.

2006ஆம் ஆண்டு மகசீன் சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் வாக்குமூலத்தை இரகசியமாக எழுத்தில் பதிவு செய்து அன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கிட்டினன் சிவநேசனிடம் கொடுத்தார்கள்.

ஒரு சிடியில் பதிவு செய்யப்பட்ட இவ்வாக்கு மூலங்களை சிவநேசன் ஐயா 2006ஆம் ஆண்டு வன்னியில் இருந்த மனிதவுரிமை ஆர்வலர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார். (சிவநேசன் ஐயா 2008 மார்ச் மாதம் சிறிலங்கா இராணுவத்தின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்ப தையும் இங்கு குறிப்பிட வேண்டும்.)

தொடர்ச்சி 10ம் பக்கம்



# போராட்ட செய்திகளை வெளியிடும் ஊடகங்கள்தான் எங்கள் போராட்டங்களின் உயிர் நாடி

– ராஜ்குமார்

**கடந்த 30ஆம் திகதி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் அவர்கள் டக்ளஸ் தேவானந்தாவின் ஒட்டுக் குழுக்களால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணல்**

**கேள்வி:**

**கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தின் போது நீங்கள் தாக்கப்பட்டது பற்றி கூறுங்கள்?**

**பதில்:**

தமிழ் மக்களின் போராட்டங்களை இல்லாமல் செய்தது போல், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தையும் இல்லாமல் செய்யும் நோக்குடன், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வ தேச ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டமே தமிழர்களின் போராட்டமாகவும், உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்த போராட்டமாகவும், ஐ.நாவில் ஒரு நடவடிக்கை எடுக்கக் கூடிய தன்மையிலும் இருப்பதுடன், ஜெனீவாவில் பேசுபொருளாகவும் தற்போது இருந்து வருகின்றது. இது தொடர்பாக குற்றம் செய்தவர்களே ஆட்சியில் இருப்பதால் ஐ.நா. கூட்டத் தொடரில் கடும் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக உள்ளது. தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளை ஈ.பி.டி.பி டக்ளஸ் தேவானந்தா மூலம் நிறைவேற்றி வைக்கும் செயற்பாடுகள் ஏற்கனவே திட்டமிட்டது போல் அரங்கேற்ற முற்பட்ட போது, நாங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், குற்றம் செய்தவர்கள் நீதி வழங்க முடியாது என்பதை நாங்கள் தெரிவித்து போராட்டம் செய்தோம்.

அவர்கள் செய்த குற்றங்களுக்கான ஆதாரங்கள் உள்ளன. விக்கிப்பீடியாவில் முன்னாள் அமெரிக்க தூதுவர் பிளேக் அனுப்பிய ஆதாரங்கள் உள்ளன. தங்களின் கடந்தகால உண்மைகளை வெளிக் கொண்டு வந்தது என்ற ஆத்திரத்தில் ஈ.பி.டி.பி கட்சியின் வவுனியா மாவட்ட திலீபன் என அழைக்கப்படும் கஜீபனும், அவரின் சகஉறுப்பினர்களும் கறுப்பு நிற வான் வைத்திருக்கும் மதன் என்பவரும். (இப்போது வெள்ளைவான் அல்ல. கறுப்பு வான் வைத்திருக்கின்றனர்.) அவர்களுடன் கூமாங்குளத்தைச் சேர்ந்த விக்டர் என்பவரும், இவர்களுடன் பூந்தோட்டத்தைச் சேர்ந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து, நான் ஒரு உணவகத்திற்கு சென்ற போது, எனக்கு பின்னால் வந்து கொலை அச்சுறுத்தல் தாக்குதலை மேற்கொண்டனர். அது அங்குள்ள CCTV கமராவில் பதிவாகியுள்ளது. இவர்கள் எப்படியான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்பது அதைப் பார்த்தால் தெரியும். இது ஒரு குற்றமான தாக்குதல் என்பதும் எல்லோருக்கும் தெரியும்.

இதனையடுத்து, மக்கள் காவல்துறையினருக்கு அறிவித்தும், அந்த இடத்திற்கு காவல் துறையினர் வந்தனர். பின்னர் நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையத்திலிருந்து திலீபன் என்பவர் தொலைபேசியில் தனது கூலிப்படைகளுடன் தொடர்பு கொண்டு, நான் பார்த்துக் கொள்கின்றேன். நீங்கள் போங்கள் என்று கூறி கூலிப்படைகளை அங்கிருந்து வெளியேறச் செய்தார். நான் காவல் நிலையத்தில் வைத்து இவர் தான் என்னைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டை நேரடியாக சுமத்தியிருந்தேன். ஜனநாயக ரீதியான இந்தப் போராட்டத்தில் எனது உயிரைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையைதான் இதில் எடுத்திருந்தேன்.

என்மீது தாக்குதல் நடந்து கொண்டிருந்த அதே சமயம் நான் வவுனியாவைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்களுக்கு என் மீதான தாக்குதல் செய்தியை அறிவித்திருந்தேன். ஏனெனில் மக்களுக்கு இவர்களின் உண்மை முகம் தெரிய வேண்டும். ஜனநாயக ரீதியான போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் நான் அவர்களுக்கு திருப்பி ஒரு தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை. இன்று அது உலகம் முழுவதும் தெரிந்திருக்கின்றது.

ஐ.நாசபை மற்றும் வெளிநாட்டு மனித உரிமை நிறுவனங்கள் என்னுடன் தொடர்பு கொண்டுள்ளனர். சட்ட ரீதியாக இவர்களின் உண்மை முகத்தைக் கொண்டு வருவதற்கான முழு வேலைகளையும் நான் செய்வேன். காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டங்களில் குற்றம் செய்தவர்கள் இப்படியான தடைகளை ஏற்படுத்த முடியாது என்பது இதற்கு நல்லதோர் உதாரணமாகும். பட்டப்பகலில் 1.30 மணிக்கு பல பொது மக்கள் பார்த்திருக்க என்மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள், தாங்கள் தாக்குதலை மேற் கொள்ளவில்லை எனக்கூறுவது ஈ.பி.டி.பி கட்சியும் அவர்களின் ஜனநாயகமும் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்பதையும் இனியும் எதையும் செய்யப் போவதுமில்லை என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

**கேள்வி:**

**உங்கள் மீதான தாக்குதல் இந்தப் போராட்டங்களுக்கு எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்?**

**பதில்**

இந்தத் தாக்குதல் போராட்டத்திற்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. மற்ற மாவட்டங்களில் உள்ள தாய்மாருக்கு ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தியிருந்தாலும், நான் இல்லாத போது அந்த தாய்மார் ஒரு போராட்டத்தை நடத்தியிருக்கின்றார்கள். இந்த தாக்குதலின் பின்பே பேராட்டத்தில் ஈடுபடும் தாய்மாரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தாய்மாருக்கு ஒரு துணிவையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் நாங்கள் சரியான இடத்தில் தான் எமது போராட்டத்தை நடத்தியிருக்கின்றோம். அதனால் தான் இவர்களுக்கு அச்சம் இருக்கின்றது. எனவே இந்த விடயங்களில் உண்மை இருக்கின்றது. பிள்ளைகளை கடத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதற்கான ஆதாரங்களை வெளியிட்ட பின்னர் இவர்கள் கோபத்தில் தாக்குதலை மேற்கொண்டதானது தங்கள் பிள்ளைகள் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையை அந்த தாய்மாருக்கு அதிகரிக்கச் செய்துள்ளது.

இதனால் ஏனைய மாவட்டங்களில் உள்ள தாய்மார்கள் சுயமாகவே தங்கள் போராட்டங்களை முன்னெடுக்க முன்வந்துள்ளனர். மற்றைய மாவட்டங்களில் தாங்கள் போராட்டம் செய்வதாக அறிவித்துள்ளனர்.

**கேள்வி:**

**போராட்டங்களின் போது நீங்கள் அரசியல்வாதிகளை நேரடியாக விமர்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதேவேளை இச்செயலானது போராட்டத்தை வேறு திசைகளில் கொண்டு செல்வதாகவும் பேசப்படுகின்றது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

**பதில்**

இவ்வாறு கூறிய கட்சிகள் உட்பட அனைவருமே இந்தத் தாக்குதல் தொடர்பாக தங்கள் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். எல்லா அரசியல் கட்சிகளுக்கும் நாங்கள் எதற்காக போராடுகின்றோம் என்ற உண்மை தெரிந்திருக்கும். தமிழர்களின் விடுதலைக்காகவும், தமிழினத்தின் நாளைய பாதுகாப்பிற்காகவும், வாழ்வுரிமைக்காகவும், தீர்விற்காகவும் பேராடுகின்றோம் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். அதாவது சிங்கள பேரினவாத அரசு ஈ.பி.டி.பி உட்பட தமிழர்கள் அனைவரையும் எங்களுக்குள்ளே பிளவுகளை ஏற்படுத்தி எங்களுக்குள்ளேயே மோதவிட்டு தங்கள் இலக்கை அடைய முற்படுகின்றார்கள். ஜனாதிபதி அண்மையில், ஒற்றையாட்சியை பாதுகாப்பேன், பௌத்த மதத்தையும் பாதுகாப்பேன் என்று கூறியது போல எங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தி நீண்ட காலம் புரையோடிப் போகும் பிரச்சினையாக இதை தமிழர்களிடையே உருவாக்கி தங்கள் இலக்கை நோக்கி அவர்கள் சரியாக பயணிக்கின்றனர். அதை இந்த அரசியல் தலைவர்களின் கண்டன அறிக்கையில் காணக்கூடியதாக இருக்கின்றது.

யார் தவறு செய்திருக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியும். அவர்களை யார் பாதுகாக்கின்றார்கள் என்பதும் எமக்குத் தெரியும். அதன் அடிப்படையில் தான் அந்த அரசியல் தலைவர்கள் மீது குற்றஞ் சுமத்தி போராட்டத்தை மேற்கொண்டுள்ளோம். ஏனெனில் காலநீடிப்பு வழங்கியதும், இந்தக் குற்றவாளிகள் பாதுகாக்கப்பட்டதுமே இன்று எம்மீதான இந்த கொலை வெறித் தாக்குதலை மேற்கொள்ளக் காரணமாகியது.

**கேள்வி**

**புலம்பெயர்ந்த தமிழர்கள் உங்களுக்கு எவ்வாறான ஆதரவை வழங் குவார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? அவர்களின் ஆதரவு உங்களுக்கு உண்டா?**

**பதில்**

புலம்பெயர் தமிழர்களின் ஆதரவு

**தொடர்ச்சி 10ம் பக்கம்**

# தாயகத்தில் விரைவாக்கப்படும் குடியேற்ற காலனியம் இனவழிப்பின் இன்னொரு கரம்



காலனியம் என்றால் உலகில் வாழும் பெருந்தொகையானவர்களுக்கு என்னவென்று தெரியும். 500 ஆண்டுகள் தொடர்ந்த ஐரோப்பிய காலனியம் எவ்வாறு ஐரோப்பாவுக்கு வெளியில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை உருத் தெரியாமல் மாற்றியது என்பதும் இன்று மக்களுக்கு தெரியும். இக்காலனியம் தான்தோன்றித்தனமாக உருவாக்கிய "நாடுகளில்" இன்று தொடரும் தேசியப் போராட்டங்களும் ஓரளவுக்கு எமக்கு தெரியும். இது எமக்கு தெரிந்த காலனியம்.



குடியேற்ற காலனியம் என்றால் என்ன வென்று எமக்கு தெரியுமா? லத்தீன் அமெரிக்க நாடுகள், கனடா, ஐ-அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியனவே ஐரோப்பிய குடியேற்ற காலனியத்திற்கு உள்ளாகிய இடங்கள். எமது தாயகப் பகுதிகளில் இடம் பெற்றது காலனியம். ஆனால் மேலே சொன்ன இடங்களில் இடம் பெற்றது குடியேற்ற காலனியம்.

எமது பகுதிகளில் இடம் பெற்ற காலனியம் இனவழிப்பு செய்ததா என்பது ஓரளவுக்கு விவா தத்திற்கு உரியது. நிச்சயமாக சில இடங்களில் இனவழிப்பு செய்திருக்கிறது. சாசிதரூர் என்ன கேரளாவை சேர்ந்த ஒரு அரசியல்வாதி 2015 ஒக்ஸ்ஃபேர்ட் பல்கலைக்கழக விவாதத்தின் போது பிரித்தானியா இந்தியாவின் வளங்களை எவ்வாறு சூறையாடியது என்பதை விளக்கினார்.

அவருடைய உரை வைரலாக மாறியது. அது பற்றி பின்னர் அவர் ஒரு விரிவான நூலையும் எழுதியிருக்கிறார். இந்தியாவின் வளங்களை சூறை யாடியதால் தான் அங்கு சுதந்திரப் போராட்டம் உக்கிரமாக இடம்பெற்றது. அப்போராட்டத்தை அடக்கவே பிரித்தானியா இலங்கைத்தீவை தனது கப்பல் படையின் முக்கிய தளமாக்கியது. அதற்காக தமிழீழ பகுதிகளை சிதைத்தது. சிங்களவர்களை ஆரியர்கள் என்று சொல்லி தமது கையில் போட்டு வைத்திருந்தது. இதுவெல்லாம் இனவழிப்பா என்று தெரியவில்லை.

குடியேற்ற காலனியம் வித்தியாசமானது. பெருந்தொகையாக ஐரோப்பியர்கள் குடியேறி அங்கு வாழ்ந்து கொண்டிருந்த பூர்வகுடிமக்களை இனவழிப்பு செய்த இடங்களே குடியேற்ற காலனிய இடங்கள். இது விவாதத்திற்கு உரியதுஅல்ல.

குடியேற்ற காலனியம் என்றாலே இனவழிப்புடன்தான்இடம் பெறும். கனடாவிலும் ஐ-அரெிக்காவிலும் வாழ்ந்த பூர்வகுடிகள் இனவழிப்பு செய்யப்பட்டே இந் நாடுகள் உருவானது. இதுபோலத்தான் லத்தீன்அமெரிக்க நாடுகளிலும். அவுஸ்திரேலிய பூர்வகுடிகளின் இனவழிப்புடன் தான் அவுஸ்திரேலிய நாடு உருவானது. நியூசிலாந்தின் மயோரி மக்களின் இனவழிப்புடன் தான் நியூசிலாந்து நாடு உருவானது.

இப்பூர்வகுடி இனங்களில் எஞ்சியிருப்ப வர்கள் எல்லாம் இன்றும் போராடிக் கொண்டுதான்

**நா. மாலதி**

இருக்கிறார்கள். இவர்களில் ஓரளவாதல் உரிமைகள் பெற்று வாழ்பவர்கள் என்றால் அது நியூசிலாந்து நாட்டின் மயோரி மக்கள் தான். இவையெல்லாம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடந்தவை. இன்றும் வரலாறு அறிந்தவர்கள் இந் நாடுகளை குடியேற்ற காலனிய நாடுகள் என்று தான் அழைப்பார்கள்.

லண்டன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் டேமியன் ஷோர்ட் 2016இல் வெளி யிட்ட நூல் (Redefining Genocide: Settler Colonialism, Social Death and Ecocide) குடியேற்ற காலனியத்தை மையமாக வைத்து இனவழிப்பை வரையறை செய்வது பற்றி பேசுகிறது. குடியேற்ற காலனியம் எப்போதும் சமூக இறப்பையும், சூழல் அழிவை யும் இனவழிப்பையும் கொண்டு வரும் என்கிறது இந்நூல்.

இக்கருத்துடன்தான் இன்று தமிழீழப் பகுதிகளில் இடம் பெறும் நில அபகிரிப்புக்களை நாம் கணிக்க வேண்டும்.

2009ற்கு முன்னர் நடந்த இனவழிப்பு ஒருவகை. முள்ளிவாய்க்காலில் நடந்த இனவழிப்பு ஒருவகை. இப்போது நடப்பது குடியேற்ற காலனிய இனவழிப்பு. முந்தியவற்றைவிட இது அபாயமானது என்பது எமக்கு தெரிய வேண்டும். எமக்காக பேசுபவர்கள் என்று சொல்லிக் கொண்டு இயங்கி வரும் சில தமிழரல்லாதவர்கள் ஈழத்தமிழ் இனவழிப்பை பகிரங்கமாக ஏற்க மறுக்கிறார்கள். ஐநா ஏற்றால் தான் இனவழிப்பு என்கிறார்கள்.

குடியேற்ற காலனியம் என்னும் இன வழிப்பு பற்றி பேசும் மேலே குறிப்பிட்ட பேராசிரியர் ஷார்ட்டின் நூலில், அவர் நான்கு இடங்களை உதாரணங்களாக எடுத்து தனது கருத்தை விளக்குகிறார்.

முதலாவதாக பாலஸ்தீனத்தை உதரணமாக எடுக்கிறார். ஐநா பாலஸ்தீன இனவழிப்பை ஏற்றுக் கொண்டதா? இல்லையே. இரண்டாவது உதாரணமாக எண்ணெய் உற்பத்திக்காக அக ழப்படும் தார்மண் உள்ள கனடாவின் ஒரு பகுதியின் பூர்வ குடியினத்தை உதாரணமாக கையாளுகிறார். அவரின் மூன்றாவது உதாரணம் அவுஸ்திரேலியாவின்பூர்வகுடிகளின்இனவழிப்பு. இவை ஐநாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையா? இல்லையே. அவரின் நான்காவது உதாரணம் தமிழீ ழத்தில் இடம் பெறும் குடியேற்ற காலனியம்.

இவை எதையும் ஐநா இனவழிப்பு என்று சொல்லவில்லையே? அப்படியானால் எமக்காக உழைக்கிறோம் என்று சொல்பவர்கள் இந்த இனவழிப்புகள் எதையும் ஏற்கமாட்டார்களா? சிந்திப்போம்.

2009ற்கு முன்னர் நடந்த இனவழிப்பு ஒருவகை. முள்ளிவாய்க்காலில் நடந்த இனவழிப்பு ஒருவகை. இப்போது நடப்பது குடியேற்ற காலனிய இனவழிப்பு. முந்தியவற்றைவிட இது அபாயமானது



## அடுத்த 100 வருடங்களுக்கு இலங்கையை தமது பக்கம் வைத்திருப்பதற்கான தந்திரோபாயத்தில்

# அமெரிக்காவும், இந்தியாவும் தோல்வியடைந்து விட்டன

**க**டந்த 35 ஆண்டுகளாக நடாத்தப்பட்ட தமிழர்களின் விடுதலைப் போராட்டம், சிங்கள இனம் ஒரு வளர்ச்சியடைந்த இனமாக இருக்கின்ற போதிலும், அவர்களின் நடத்தையானது அடிப்படைவாதத்தை கொண்டதாகவே அமைந் திருக்கிறது என்பதை தெளிவாக சுட்டிக் காட்டியே வந்திருக்கின்றது. குறிப்பாக சிங்கள பௌத்த மேலாண்மை சிந்தனையோடு, இலங்கை முழுவதையும் சிங்களமயமாக்க வேண்டும் என்ற கனவோடு தனது நிகழ்ச்சி திட்டத்தை நடை முறைப்படுத்தி வருகின்றது என்பதனை சர்வதேச சமூகத்திற்கு தமிழரின் விடுதலைப் போராட்டம் தெளிவாக சொல்லி வந்திருக்கிறது.

இந்த அடிப்படைவாத சிங்கள மேலா ண்மை என்பது, வேறு எந்த காரணிகளையும் கருத்தில் கொள்ளாமல் வெறுமனே சிங்கள பௌத்த மதத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சிந்தனையாகவே இருக்கின்றது. குறிப்பாக சிங்கள பௌத்த குருமார்களின் புனைவில் உருவாக்கப்பட்ட மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டே அனைத்தும் வழிநடத்தப்படுகிறது. இங்கே மதம் என்ற விடயமே அனைத்திலும் முன்னுரிமை கொடுக்கப்படுவதனால், வெளிநாட்டு உறவு கள் என்ற விடயத்திலும் மதமே பெரும் செல்வா க்கினை செலுத்துகின்றது.

2000ம் ஆண்டு வரைக்கும் தன்னை வெளியில், வெளிப்படுத்திக் கொள்ளாத வகையில் சீனா இருந்ததனால் 1970களில் இருந்து 2000 வரைக்குமான பனிப்போரின் பின்னரான காலப்பகுதியை அமெரிக்கா தன்னுடைய விருப்பம் போல கையாண்டு வந்தது. தான் விரும்பிய அல்லது இலாபம் தரக்கூடிய இனங்களுக்கு புதிய நாடுகளை உருவாக்கிக் கொடுப்பதும், விரும்பாத அல்லது இலாபம் பெற முடியாத இனங்களை குறிப்பிட்ட அரச பயங்கரவாதங்களுடன் சேர்ந்து அழிப்பதுமாக, தனது வெளியுறவு கொள்கைகளை வகுத்து வந்தது. 2000ஆம் ஆண்டுக்கு பின்னர் ரஸ்யாவின் மீள் எழுச்சியும், சீனாவின் முதல்தர வல்லாதிக்க கனவும் அமெரிக்காவுக்கு சில சத்தங்களையும், முனகல்களையும் கொடுத்து வந்ததே தவிர, முழுமையான எதிர் நிலையாளர்களை அல்லது அமெரிக்காவை விஞ்சும் போட்டியாளர்களை பூகோள அரசியல் கொண்டிருக்கவில்லை என்பதை ஓரளவுக்கு கூறிக்கொள்ள முடியும். ஆனால் 2020 உடன் தொடங்குகின்ற அடுத்து வருகின்ற காலம் அமெரிக்காவுக்கு மிகச்சிறந்த போட்டியாளர்களையும், எதிராளிகளையும் கொடுக்கின்ற காலமாக, இன்னும் சொல்லப் போனால் போட்டியின் உச்சக்கட்டம் இனங்களை பிரித்து பங்கு போடுகின்ற காலமாக எதிர்வரும் காலம் அமையவிருக்கின்றது. இதற்கு நாடுகளின் இறையாண்மையோ அல்லது எல்லைக் கோடு களோ அவர்களுக்கு தடையாக இருக்கப் போவது மில்லை, அத்துடன் அவர்கள் அதை தடையாக நினைக்கப் போவதுமில்லை.



**பிரா. பத்மராஜ்**

இது இவ்வாறு இருக்க, இந்த உண்மைகளை மேற்கு நாடுகளும், இந்தியாவும் விளங்கிக் கொண்டிருந்தாலும் தங்களின் தந்திரோபாயங்களின் மூலம் சீனாவை நோக்கிய இலங்கையின் நகர்வை கட்டுப்படுத்த முடியும் என்றே நம்பினார்கள். அவர்களின் இந்த நம்பிக்கையே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தினை அழிக்கும் நிலை வரைக்கும் கொண்டு சென்றது. ஆனால் உலகம் வியப்பாக பார்த்த தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் வரையில், வல்லரசு களை கையாள்வதில் சிங்களத்துக்கு பிரச்சனை எதுவும் இருக்கவில்லை. காரணம் இலங்கைக்குள் நுழைவதற்கு விடுதலைப் போராட்டம் தடையாக இருக்கின்றது என்ற பேரிலேயே, கண்மூடித்தனமாக வல்லரசுகளினால் கொடுக்கப் பட்ட ஆதரவுகளை எல்லாம் சிங்களம் இலாவக மாக பயன்படுத்திக் கொண்டது. விடுதலைப் போராட்டத்தை அழித்த பின்னர், இலங்கையை எவ்வாறு வல்லரசுகளுக்கு பங்கு போட்டு கொடுப்பது என்ற சிக்கலிலேயே, சிங்களம் இன்று மாட்டிக் கொண்டு தவிக்கின்றது.

அமெரிக்கா, சர்வதேச ரீதியாக செய்கின்ற அரசியல் குழிபறிப்புக்கள், வஞ்சகங்கள் எது வும் இலங்கையில் எடுபடப் போவதில்லை, ஏனெனில் பௌத்த சிங்கள இனவாதமே இலங்கை அரசியலையும், மக்களையும் வழி நடத்துவதாலும், அமெரிக்காவை விட, சீனாவுடன் மத, பண்பாட்டு ரீதியாக நீண்ட தொடர்பு நிலை இருப்பதாலும், சீனாவை மீறி இலங்கைக்கு எந்த ஒரு பிரச்சனையையும், இந்தியாவோ, அமெரிக்காவோ கொடுக்க முடியாது என்று சிங்களம் நம்புவதாலுமே ஆகும். இதனால் இலங்கை மீதான பிடிமானம் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் தளர்ந்து போவதை வரும் காலத்தில் இவர்கள் பெரிய அளவில் உணர வேண்டி இருக்கும்.
2009ல் முள்ளிவாய்க்காலிலும், நந்திக் கடலிலும் விடுதலைப் போராட்டம் சர்வதேசத்திற்கும், சிங்களத்திற்கும் கொடுத்து விட்டு சென்றிருக்கும் செய்திகள்.....

***01. நாங்கள் உயிர்பிழைப்புக்காக எமது உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம்.***

***02. உயிர்விடும் வேளையிலும் விடுதலைப் போராட்டம் அறவழியினை விட்டு விலகவில்லை.***

***03, அறவழியில் சென்று மௌனிக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தை அடுத்தவர்கள் முன் கொண்டு செல்வார்கள்.***

***04. விடுதலையின் தாகத்தில் போராடும் இனத்திற்கு, இனப்படுகொலையை பரிசளிப்பதன் மூலம் அடிமைப்படுத்தி விடலாம் என்ற உங்களின் கோட்பாடு நந்திக் கடலுடன் தவிடு பொடியாகும்.***

இங்கே ஒரு விடயத்தை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற முஸ்லிம்கள் வடபகுதி சூடானில் பெருக்கமடைந்து அந்த நாட்டின் அரசியலை கையில் எடுத்து, சூடான் நாட்டின் ஆதிக்குடிகளை தென்சூடான் நோக்கி நகர செய்தமை மட்டும் அன்றி, ஆதிக்குடிகளை இனப்படுகொலை செய்யவும் அமெரிக்கா துணைபோனது. காலப்போக்கில் இனப்படுகொலையினை காரணம் காட்டி அச்சுறு த்தி தனது காரியங்களை சூடானில் அமெரிக்கா செய்ய முற்பட்ட பொழுது, சூடான் சீனா பக்கம் சாய்ந்தது. அதன் பின்னர் எண்ணை வளத்தினை தென் சூடான் பகுதிகள் கொண்டிருந்தமையால் அமெரிக்கா தன்னுடைய இலாபம் கருதி தென் சூடானை பிரித்தது. இன்று தென் சூடானிடமும் சுமூகமான இராஜதந்திர உறவுகளையே சீனா வளர்த்து வருகின்றது.

நீங்கள் நினைக்கலாம், இலங்கையில் வல்லரசுகள் கரிசனை கொள்வதற்கு என்ன இருக்கிறது??? பூகோள அரசியலின் முதன்மையான பாத்திரமாக indo-pacific கோட்பாடே அமைந்துள்ளது. அந்த கோட் பாட்டின் மையப் புள்ளியாக இலங்கை அமைந்துள்ளது. இலங்கையில் எண்ணெய் இல்லாமல் இருக்கலாம், ஆனால் உலகத்தில் யார் எண்ணெயை வைத்திருப்பது என்பதை தீர்மானிக்கும் கோட்பாட்டின் மையப்புள்ளியாக இலங்கை இருக்கும், அதன் பெறுமதி வாய்ந்த இடமாக திருகோணமலை இருக்கும்.

இனி விடயத்திற்கு வருகின்றேன். சுதந்திர மடைந்த காலத்தில் இருந்தே தமிழர்களை ஒடுக்குவதற்கு தெளிவான உள்நாட்டு, வெளி நாட்டு கொள்கைகளை வகுத்து பௌத்த இன வாதம் கற்பித்து நடைமுறைப்படுத்தி வருகிறது. டீ.எஸ்.சேனநாயக்கா, இங்கிலாந்துடன் பாது காப்பு ஒப்பந்தம் போட்டதும், இந்தியாவுடன் ஒப்பந்தத்தினை ஏற்படுத்தி

***தொடர்ச்சி 12ம் பக்கம்***

## சீனாவில் பரவிவரும் புதிய வைரஸ் சிறீலங்காவையும் தாக்கும் அபாயம்



மிகவும் ஆபத்தான வைரஸ் கிருமிகள் சீனாவில் பரவி வருவதுடன், அதனால் பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவின் குபே மாநிலத்தில் உள்ள வூகான் பகுதியில் பெருமள வான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைரஸ் கிருமிகள் வேறு நாடுகளுக்கும்பரவும்ஆபத்துக்கள்உள்ளபோதும், சிறீலங்கா மக்களை பெருமளவில் தாக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் நூறு ஆயிரத்திற்கும் மேற்பட்ட சீன மக்கள் சிறீலங்காவுக்கு வருகை தருவதால் இந்த ஆபத்துக்கள் அதிகம் என நம்பப்படுகின்றது. இந்த வைரஸ் கிருமிகள் மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு தொற்றாது என சீன அதிகாரிகள் தெரிவித்துள்ள போதும் அது மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு பரவும் என கொங் கொங் நாட்டின் நுண்ணுயிர் ஆராட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதுவரையில் 44 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் 11 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறல் போன்றவையே இதன் அறிகுறிகளாகும். 2003ஆம் ஆண்டு சீனாவில் பரவிய சார்ஸ் வைரஸ் 37 நாடுகளுக்கு பரவியதுடன், 774 பேர் பலியாகியிருந்தனர், 8000 பேர் பதிக்கப்பட்டிருந்தனர். கொங்கொங் நாட்டில் மட்டும் 299 பேர் பலியாகியும், 1755 பேர் பாதிக்கப்பட்டும் இருந்தனர். அதனைப் போலவே இந்த வைரஸ் கிருமியும் மக்களைத் தாக்கலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

## சுவீடனில் நடைபெற்ற இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம்



ஜனவரி 4ஆம் நாள் சுவீடன் நாட்டின் கோத்தென்பர்க் நகரில், பெரியார் அம்பேத்கார் வட்டம் சார்பாக இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

நகரின் மையப் பகுதியான குஷ்டாஃப் அடால்ஃப் சதுக்கத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இந்திய ஒன்றியத்தின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்களும் குடும்பத்தினருடன் பெருந்திரளாக கலந்துக் கொண்டனர்.

கடும் குளிர் இருந்த சூழலிலும் சிறு குழந்தைகள் உட்பட, வயதானவர்கள் வரை அனைத்து மொழி பேசும் மக்களும் பங்கு கொண்ட ஆர்ப்பாட்டத்தில், ”இந்தியாவின் பன்முகத் தன்மையையும் சமயச் சார்பற்றத் தன்மையையும் காப்போம் என முழக்கம்” முதன்மையாக இருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், இந்திய ஒன்றிய அரசியல் சாசனத்தின் அடிப்படை விதிகள் வாசிக்கப்பட்டு, கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் அரசியல் சாசனத்தின் முக்கிய பகுதிகளை முழக்கமாகவும் இட்டனர்.

பெரியார் அம்பேத்கார் வாசகர் வட்டம் சார்பாக கபிலன் காமராஜ் வரவேற்புரையையும், குடியுரிமை திருத்தச்சட்டத்தின் பின்புலம் குறித்த விளக்கத்தினை முனைவர் விஜய் அசோகனும் வழங்கினர். காஷ்மீரைச் சார்ந்தவர்களும் அசாமைச் சார்ந்தவர்களும் தங்கள் நேரடி அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

“வேண்டாம், வேண்டாம் குடியுரிமைத் திருத்தச் சட்டம் வேண்டாம்” , “காப்போம் காப்போம், இந்தியாவின் சமய சார்பற்ற தன்மையைக் காப்போம்” உள்ளிட்ட முழக்கங்கள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் முழங்கப்பட்டது.

### 39 வருடங்கள் ... தொடர்ச்சி..

எமது கூட்டமைப்பின் அமைச்சர் அவர். ஏன் மூங்கில் செய்யக் கூடாது என மக்களாகிய எமக்கு வந்து நேரடியாக சொல்லலாம் தானே. எமக்கு தெளிவுபடுத்தினால் நாம் அதனை ஏற்றுக் கொள்வோம்.

எமக்கு எமது பூர்வீக நிலமே வேண்டும். இதனால் எமது நிலத்தை பறிபோகாது பாதுகாக்க இவர்கள் உதவ வேண்டும். அதை விடுத்து, இவ்வாறு இந்த நிலங்கள் காடுகள் அழிக்கப்படாது கைவிடப்பட்ட நிலையில் தொடர்ந்து இருந்தால் பறிபோய்விடும் அபாயநிலையிலேயே உள்ளது. இதனைத் தடுப்பதற்கு இவர்கள் முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் கண்ணீருடன் கூறுகின்றனர்.

எனவே, மக்கள் பிரதிநிதிகளே, அரசியல் பிரமுகர்களே பறிபோகும் அபாய நிலையில் வனங்களாக உள்ள தமிழ் மக்களின் பூர்வீக கிராமத்தை பாதுக்காக என்ன செய்யப் போகின்றார்கள் என்பதே அனைவரது எதிர்பார்ப்பும் ஏக்கமும் ஆகும்.

### போராட்டசெய்திகை ... தொடர்ச்சி..

முழுமையாக உள்ளது. எங்கள் போராட்ட செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் தான் எங்கள் போராட்டங்களின் உயிர்நாடி. அவர்கள் வெளியிடும் எமது போராட்டங்களின் செய்திகளே எங்கள் போராட்டத்தின் உச்ச நிலையையும், மக்களிடத்தில் ஓர்உற்சாக மனப்பான்மையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அவர்கள் பத்திரிகைகள் பார்க்கும் விகிதமும் கூடியிருக்கின்றது. நாம் போராட்டம் செய்தால், உள்ளூர் பத்திரிகைகளும், சமூகஊடகங்களும், வெளிநாட்டு ஊடகங்களும் எங்கள் செய்திகளையே வெளியிடுகின்றன. இதன் மூலம் எங்கள் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவு உள்ளது என்பதை அறிந்துள்ளோம். ஒவ்வொரு போராட்டம் செய்யும் போதும் அதன் தாக்கம் பெரியளவில் உள்ளது. அந்த செய்திகள் வெளிவரும். இச்சமயங்களில் பத்திரிகைகளுக்கு பற்றாக்குறைகூட வரும். தமிழர்களின் ஆரம்ப கட்டப் போராட்டங்களின் போதும் இப்படியான நிலைமை இருந்தது. இப்போதும் இப்படியான போராட்டங்கள் மேற்கொள்வதை மக்கள் வரவேற்கின்றனர். இதுவே சரியான போராட்டம் என்று எங்களுக்கு மக்கள் கூறியிருக்கின்றார்கள்.

### தரமற்ற சிறீலங்கா ... தொடர்ச்சி..

வெளிவந்துள்ளன.

2015ஆம் ஆண்டே இந்த விமானங்களின் பாதுகாப்பு சான்றிதழ்கள் குறித்து கொழும்பு ஊடகங்கள் கேள்விகளை எழுப்பிய போதும், சிறீலங்கா அரசும் அதன் வான்படையும் பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் அக்கறை காண்பிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. சிறீலங்கா வான்படையினரிடம் தற்போது இரண்டு Y-12 விமானங்கள் உள்ளன. எனினும் அவர்கள் பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதன் மூலம் வருமானத்தை பெறுவதற்காக Helitours என்ற நிறுவனத்தின் இணையத்தளத்தின் மூலம் தற்போதும் விளம்பரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

பலாலி, திருமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளுக்கு சேவைகளை மேற்கொள்ளும் இந்த நிறுவனத்தில் மக்கள் தற்போதும் ஆசனங்களைப் பதிவு செய்து வருவது மிகவும் கவலை தருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனா தயாரிப்பான கெர்பியன் Y-12 விமானம் மற்றும் சியான் M.A 60 ஆகிய விமானங்களுக்கு Certificates of Airworthiness (COA) என்னும் பாதுகாப்புச் சான்றிதழ் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

### கால் நுற்றாண்டு ... தொடர்ச்சி..

இதிலிருந்த செல்லப்பிள்ளை மகேந்திரனின் வாக்கு மூலத்தில், தான் மட்டக்களப்பு சிறையில் ஒருவருடம் வைக்கப்பட்டிருந்த 1993 காலத்தில் 15 கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதை தான் பார்த்ததாக சொல்லியிருந்தார். அவர்களின் உடல்கள் சிறைச்சாலையிலிருந்த ஒரு கிணற்றினுள் போடப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

19 வயதில் எந்த குற்றமும் செய்யாமல் கைது செய்யப்பட்ட மகேந்திரன் பலரின் முயற்சியின் பின்னரும் படுகொலைகளின் சாட்சி என்ற ஒரே காரணத்திற்காக 25 ஆண்டுகள் சிறையில் இருந்தே காலமானார்.

இன்று சிறிலங்காவின் சிறைகளில் வாடும் அதிகமாக தமிழ் அரசியல் கைதிகள் மகேந்திரன் போன்று படுகொலைகளின் சாட்சி என்பதற்காகவே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை.


இந்த ஆக்கம் தொடர்பான முழு ஆவணங்களையும் எமது இலக்கு இணையத் தளத்தில் பார்வையிடலாம்.

### இதுதான் இறுதி ... தொடர்ச்சி..

இறுதியில் கம்பரரெலியா அரசியலின் மூலம் மக்கள் மனதை வெல்ல முயன்றார்கள். இறுதியில் அதுவும் தோல்விதான்.

கைதிகள் விவகாரம் கிணற்றில் போட்ட கல்லைப்போல அம்படியேதான் இருக்கின்றது. அதனால், சிறைச்சாலைக்குள்ளேயே 27 வருடங்களைத் தொலைத்த ஒவரை இழக்க வேண்டியதாயிற்று. மனோகரனின் மரணம் தான் சிறைச்சாலையில் இடம்பெற்ற இறுதி மரணமாக இருக்க வேண்டும். இதற்காக தமிழ்த் தரப்பினரிடம் உள்ள உபாயம் என்ன? கோத்தாபய அரசிடமிருந்து இதனை எவ்வாறு அவர்களால் சாதிக்க முடியும்? தேர்தல் அரசியலையும், போட்டி அரசியலையும் ஓரங்கட்டி விட்டு இது போன்ற பிரச்சினைகளை எவ்வாறு கையாளலாம் என்பதையிட்டு தமிழ்த் தலைமைகள் இப்போதாவது உருப்படியாக எதனையாவது செய்வது குறித்து ஆராயவேண்டும். இல்லையெனில் மேலும் மரணங்கள் குறித்த செய்திகள் சிறைச்சாலைகளிலிருந்து வருவதைத் தடுக்க முடியாது.

# அமெரிக்காவின் வான் தாக்குதலில்
# ஈரானின் ஜெனரல் பலி
## 20 வருட முயற்சியில் அமெரிக்கா வென்றது.



அமெரிக்க வான்படையின் தாக்குதலில் ஈரானின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஜெனரல்தர படைத் தளபதி காசிம் சுலைமனியின் மரணத்துடன் இந்த வருடம் ஆரம்ப மாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை(3) அதிகாலை இடம்பெற்ற இந்த தாக்குதலில் மேஜர் ஜெனரல் காசிம் சுலைமனி மற்றும் ஈராக்கின் ஆயுதக் குழுவின் தளபதி அபு மகிதி அல் முகன்டிஸ் உட்பட 6 பேர் கொல்லப்பட்டுள்ளது மத்திய கிழக்கில் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ரம்பின் உத்தரவிற்கு அமைவாகவே இந்ததாக்குதல் இடம்பெற்றதாக அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்ரகன் தெரிவித்துள்ளது.

இவர்கள் இருவரின் மரணம் மத்திய கிழக்கில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தலாம். அதற்கான பதிலடிகள் அங்கு இடம்பெறலாம்.

அதே சமயம் 82ஆவது வான் தாக்குதல் படைப் பிரிவைச் சேர்ந்த 3000 படையினரை அமெரிக்கா மத்திய கிழக்கிற்கு அனுப்பியுள்ளது. குவைத்தில் ஏற்கனவே உள்ள படையினருடன் இவர்கள் இணையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மற்றுமொரு வளைகுடா போரை இந்த உலகம் தாங்க முடியாது என இந்த தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குற்றரஸ் தெரிவித்துள்ளார்.



பல அமெரிக்கர்கள் உட்பட மில்லியன் கணக்கான மக்களின் மரணத்திற்கு சுலைமனி காரணமானவர். அவர் பல ஆண்டுகளுக்கு முன்னரே கொல்லப்பட வேண்டியவர் என அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து ஈராக்கில் உள்ள எரிபொருள் நிறுவனங்களில் பணியாற்றிவரும் பெருமளவான அமெரிக்கப் பணியாளர்கள் ஈராக்கில் இருந்து வெளியேறி வருவதாக எரிபொருள் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தமது மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்திருந்தது. மேலும் ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தூதரகமும் தனது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளது.

இந்த தாக்குதலின் பின்னர் பிரித்தானியா வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ராப் மற்றும் சீனாவின் உயர் மட்ட இராஜதந்திரி ஜங் ஜிச்சி ஆகியோரை தொடர்பு கொண்ட அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோ, அமெரிக்கா போர் தவிர்ப்பை விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த தாக்குதலுக்கு அமெரிக்காவே பொறுப்பு. அதற்கான எதிர் விளைவுகளை அவர்கள் சந்திப்பார்கள் என ஈரானின் பாதுகாப்புச் சபை பேச்சாளர் கிவன் கொஸ்ராவி தெரிவித்துள்ளார். அதே சமயம், ஈரானின் பல நகரங்களில் இடம் பெற்ற அமெரிக்காவுக்கு எதிரான பேரணிகளில் பல பத்தாயிரம் மக்கள்; கலந்துகொண்டனர்.

அதேசமயம், ஈரானின் புரட்சிகர படையணியின் வெளிநாட்டு நடவடிக்கை தளபதியாக பிரிகேடியர் எஸ்மாயில் குவானி நியமிக்கப்பட்டுள்ளதாக ஈரானின் அரச தலைவர் அயோற்றெல்ல கமெனி அறிவித்துள்ளார். இந்த தாக்குதலுக்கான அதிக விலையை அமெரிக்கா செலுத்தும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தாம் சுலைமானியின் பாதையில் தொடர்ந்து பயணிக்கப் போவதாக லெபனானின் கிஸ்புல்லா அமைப்பின் தலைவர் சயீட் காசன் நஸ்ரல்லா தெரிவித்துள்ளார். இந்த தாக்குதல் மூலம் தனது இலக்கை அடைந்து விட்டதாக அமெரிக்கா எண்ண முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரான் தனக்கு சார்பான ஆயுதக் குழுக்கள் மூலம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தலாம் என அந்த நாட்டு இராணுவம் எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. பிரதமர் நெத்தன் யாகுவும் கிறீஸ் நாட்டுக்கான தனது பயணத்தை இடைநிறுத்தி நாட்டுக்கு திரும்பியுள்ளார்.

### யார் இந்த சுலைமனி?

ஈரானின் புரட்சிகர இரணுவத்தின் சிறப்பு படையணியின் வெளிநாட்டு நடவடிக்கை பிரி வின் தளபதியாவார். ஈராக், சிரியா உட்பட பல நாடுகளில் இடம் பெறும் தாக்குதல்களை இவரே ஒருங்கிணைத்து வந்திருந்தார். கடந்த 20 வருடங்களில் மேற்குலகம் மேற்கொண்ட பல படுகொலை முயற்சிகளில் இருந்து உயிர் தப்பியவர்.

இதனிடையே, இந்த தாக்குதல் குறித்து கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்காவின் ஜனநாயக காங்கிரஸ் தலைவர்கள், அமெரிக்க அதிபர் தம்மிடம் அனுமதியை பெறவில்லை எனவும் இந்த தாக்குதல் மேலும் பதற்றத்தை அதிகரிக்கும், அது அமெரிக்க மக்களின் மரணத்திற்கும் காரணமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்ததாக்குதலைத் தொடர்ந்து எண்ணெயின் விலை 4 விகிதம் அதிகரித்துள்ளது.

தாக்குதல் உலங்கு வானூர்தி மூலம் நடத்தப்பட்ட இந்த தாக்குதலைத் தொடர்ந்து கருத்து எதனையும் தெரிவிக்காத அமெரிக்க அதிபர் தனது ருவிட்டர் சமூகவலைத்தளத்தில் அமெரிக்க கொடியை பறக்கவிட்டது ஈரானை மேலும் சினமடைய வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



கடந்த மாதம் ஈரான் ஆதரவு ஈராக்கிய பி.எம்.யு படையினர் மேற்கொண்ட உந்துகணைத் தாக்குதலில் அமெரிக்க பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பல படையினர் காயமடைந்திருந்தனர். அதன் பின்னர் அமெரிக்கா மேற்கொண்ட வான் தாக்குதலில் பி.எம்.யு படையை சேர்ந்தவர்களும் பொதுமக்களுமாக 25 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.


இதற்கு பதிலடியாக பி.எம்.யு படையினர் அமெரிக்காவின் தூதரகத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டு சில பகுதிகளுக்கு தீ வைத்திருந்தனர். உயர் பாதுகாப்பு வலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் அமெரிக்காவை அதிர்ச்சியடைய வைத்திருந்தது.

இதனிடையே, 2001ஆம் ஆண்டு அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் அமெரிக்கா நடத்திவரும் போரில் ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இதுவரையில்500,000பேர்கொல்லப்பட்டுள்ளதாக பிறவுன் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. ஆனால் ஈராக்கில் மட்டும் 14 இலட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளதாக வேறு தரப்புக்களின் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# இலங்கையை அச்சம் கொள்ள வைக்கும் டெங்கு(DENGUE) நோய்

அருண்மொழி




டெங்கு நோயானது தென்னாசியா, கரிபியன் நாடுகள், தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் பரவக்கூடிய நோயாகும். அண்மைக் காலமாக டெங்கு இலங்கையை ஆட்டிப் படைத்து வரும் நோயாக மாறி வருகிறது. இலங்கையில் டெங்கு சடுதியாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம்(WHO) அறிவித்துள்ளது. 200000நோய்த் தொற்றுள்ளோர் ஜூலை மாதம் 2019வரை பதிவாகினர். 2019 ஒகஸ்ட் மட்டும் 9459 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கடந்த வருடம் 2019 இந்த நோய் காவுகொண்ட உயிர்கள் செப்டெம்பர்மாதத்திலேயே75ஐ தாண்டிவிட்டது. இது வருட சராசரி இறப்பு எண்ணிக்கையை (52) விட அரை மடங்கு அதிகமாகும்.


மலேரியா நோய்க்குப் பிறகு இலங்கையில் கூடிய கவனத்தையும் கவலையையும் ஏற்படுத்தும், ஆண்டுதோறும் வழமையாக தொடரும்(endemic) நோயாக டெங்கு இடம் பிடித்து விட்டது. இது கொழும்பு, காலி, கம்பகா, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் உச்சமாக காணப்படுகிறது.

### நோயின் அடிப்படைகள்

டெங்கு வைரஸ் DENV 1 – 4 என நான்கு வகை கிருமிகள் இந்த நோயை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. இந்த வைரசுக்களை நோயாளியிடம் இருந்து காவும் நுளம்புகள் ஈடிஸ் வகை (Aedes aegypti / Ae. Albopictus) பெண் நுளம்புகள் ஆகும். மழை காலங்களின் பின் தெளிவான மழை நீரை கொள்ளும் டயர்கள், கூரை பீலிகள் மற்றும் அனைத்து பாத்திரங்களிலும் இந்த நோய்காவி நுளம்பு பெருகும். இரண்டு மூன்று வாரங்களில் இந்த நுளம்புகள் முட்டையிலிருந்து நிறைவுடலியாக வல்லவை. இவை விடிகாலைப் பொழுதிலும் மாலைப் பொழுதிலும் மனிதனைக் கடிக்கின்றன. இதன் போது நோய்த் தொற்றுள்ளவரில் இருந்து சுகதேகிக்கு கிருமிகள் பரப்பப்படுகிறது.

### நோயின் குணம் குறிகள்

டெங்கு நோய் சாதாரண வைரஸ் காய்ச்சல் போல தோன்றும். காய்ச்சல், தலைவலி, தோல் புள்ளிகள் (Rash) இதன் மூன்று கூட்டு குறிகளாகும். இரண்டாவது முறை ஏற்படும் டெங்கு தொற்று உயிராபத்தான டெங்கு நோயை (Dengue Haemorrhagic Fever (DHF) உண்டாக்க வல்லது.DHF-காய்ச்சலுடன் தோலின் கீழ் குருதிக்கசிவு, முரசு, மூக்கு இரத்தக் கசிவு காணப்படுகின்ற நிலை இந்த நோயின் ஆபத்தான நிலையாகும். உடலில் உருவாகும் எதிர்ப்பு சக்தி இரண்டாவது தடைவ தொற்று வரும்போது ஏற்படும் நிர்ப்பீடன தாக்கங்களால் குருதிச் சிறுதட்டு (Platelets), பைபிறினோஜன்(Fibrinogen)அளவுகள் குறைவதோடு சம்பந்தமான குருதி உறைதலில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனுடன் குருதி மயிர்க் குழாய் அனுமதி திறன் அதிகரிப்பால் குருதிப்பாயம்(plasma)கசிவும் ஏற்படுவதால் ஈரல் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் மரணமடையும் நிலை உருவாகிறது. இதற்கான முழு உண்மைகள் இன்னும் கண்டறியப்படவில்லை.




**டெங்கு ஆண்டுப் பரம்பல் புள்ளி விபரம்.புரப்பும் ஈடிஸ் பெண் நுளம்பு வைரஸ் கிருமி.**

### நோய்த் தடுப்பு முறைகள்

நோய்காவிக் கட்டுப்பாடே முதன்மையான தடுப்பு முறையாகும். நுளம்புச் செறிவு நோய்க் கிருமிச் செறிவு என்பன கட்டுப்படுத்தப்பட்டால், இந்த நோய்ப் பரவலைத் தடுத்து விடலாம். வைரஸ் கிருமிக்கு மருந்துகள் இல்லை. எனவே வருமுன் காத்தலினாலேயே இதனைத் தடுக்க முடியும். நகரப் பகுதிகளின் சுற்றுப் பகுதி பாதுகாக்கப்பட வேண்டும்.

தமிழீழ நடைமுறை அரசின் சுகாதாரப் பிரிவு இதனை இலகுவாக கட்டுப்படுத்தியது. அதன் அடிப்படை விதிகளாக மழைப் பொழிவுகள் முடிவுற்று ஒரு வாரம் முடிவுறும் போது பூச்சியியல் ஆய்வுப் பிரிவு நோயாளர் உள்வரும் முக்கிய இடங்களில் சோதனைகளை நடாத்தி நோய்காவிப் பெருக்கமுள்ள இடங்களை அறிவிக்க மக்களோடு மக்களாக சுகாதாரப் பிரிவு சிரமதானம் விழிப்புணர்வு போன்றவற்றை மிகவும்நேர்த்தியாகநடைமுறைப்படுத்தியது.இதனை பெருநிலப்பரப்பில்தனது வலிமையனைத்தையும் கொண்டு தடுத்து நிறுத்தியது.

இதற்கு சான்றாக வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளில் இதே நுளம்புகளால் பரப்பப்படும் சிக்குண்குணியா இலட்சக் கணக்கில் நோயாளர்களைப் படுக்கையில் வீழ் த்திய வேளையில், வன்னிக்குள் தொண்டு நிறுவனங்களால் நம்ப முடியாதபடி ஒருவர்கூட பாதிக்கப்படவில்லை. மலேரியாவைக் கூட வன்னிப் பகுதியே முதன் முதலாக முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. மனிதவள முகாமைத்துவம் தலைமைத்துவம் இங்கு இருந்த அளவுக்கு இலங்கையின் தலைநகர பகுதிகளில் ஒருபோதும் இருந்ததில்லை. இதன் விளைவே இன்றைய நிலையை உருவாக்கியுள்ளது.

### அடுத்த 100 ... தொடர்ச்சி..

தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்பியதும்,

சிங்கள குடியேற்றங்களை உருவாக்கியதும் தமிழர்களை ஒடுக்குவதற்கான அடிப்படைகளே ஆகும். அவ்வாறு சிங்களவன் தமிழர்களை ஒடுக்குவதற்கான வேலைகளை செய்து கொண்டிருந்த காலத்தில், அவர்களுடன் சேர்ந்து வாழலாம் என்று, நம்முடைய அறிவாளிகள் அவர்களுக்கு சேவகம் செய்து சுகபோக வாழ்க்கையினையே அனுபவித்து வந்தனர்.

இன்று 35 வருட விடுதலைப் போராட்டத்தில்65000தியாகிகளை,400000மக்களைஇழந்த பின்னரும், சிங்களவன் எப்படி முழுவதுமாக அழித்து விடவேண்டும்என்பதற்கானஉள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளை உருவாக்கிக் கொண்டு இருக்கிறான். ஆனால் நம்மவர்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழலாம் என்று, நம்முடைய அறிவாளிகள் அவர்களுக்கு சேவகம் செய்து சுகபோக வாழ்க்கையினையே அனுபவித்து வருகின்றனர்.

**ஈழத்தமிழன் பின்னடைவில் இருப்பதற்கு பிரதான காரணங்கள்**

01. நம்முடைய அறிவாளிகள் சேர்ந்து வாழலாம் என்று கூறி மக்களை ஏமாற்றிக்கொண்டு சுகபோக வாழ்க்கையில் கிடப்பதாகும்.

02. சிங்களவனால் எம்மை அழிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இருந்து பாதுகாப்பு தேட நடவடிக்கை எடுத்தோமே தவிர, அவனை வெல்வதற்கு எந்த விதமான நடவடிக்கைகளோ அல்லது திட்டங்களோ அல்லது உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகளோ இதுவரையில் உருவாக்கப்படவில்லை, என்பதே உண்மை ஆகும்.

நிற்க, ஜெனரல் சேர் ஜோண் கொத்தலாவல பல்கலைக்கழகத்தை நிறுவி பாதுகாப்பு, உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளை, உலக தரத்தில் பௌத்த சிங்கள மேலாண்மைக்கேற்ற வகையில் திட்டங்களை வகுத்து வரும் சிங்களவனை தமிழர்கள் மோடர்கள் என்கிறார்கள்,

ஆனால் சிங்களத்துடன் சேர்ந்து வாழலாம் என்று சுகபோகத்தில் கிடப்பவர்களையும், படித்து விட்டு அன்னியநாடுகளுக்கு அடிவருடியாக வேலை செய்து கொண்டிருப்பவர்களையும் கொண்ட ஈழத்தமிழினம் தன்னைத்தானே அறிவாளிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.